

# புரோகிதன் மளாக்கான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JUN 1949
MADRAS

R 34
W49
113774

...ரால் நிலையம்., சென்னை

# புரோகிதன் : :
# : : முளைத்தான்

மறுமலர்ச்சி நூல் நிலையம்.
18, ஆயலூர் முத்தையா முதலி தெரு,
சென்னை - 1.

விலை அணா 3

மூர்த்தி பிரிண்டிங் வொர்க்ஸ்,
சென்னை.

# :: புரோகிதன் முளைத்தான் ::

பண்டைக்காலத்தில் மக்கள் நாகரீகமின்றி காட்டு மிராண்டியாய் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் வசித்துவந்தபோது, அவர்களின் வாழ்க்கை இயற்கைக்கு அடிமைப்பட்டிருந்தது. இயற்கையில் நடைபெறும் அதிசயங்களைக் கண்டு அஞ்சுவது மனித இயற்கை. மின்னல், இடி, பூகம்பம், புயல்காற்று, எரிமலை, வெள்ளம், நீர் வீழ்ச்சி, முதலிய அற்புதங்கள் மனித சக்திக்குக் கட்டுப்படுவதில்லை. ஆயினும், இவை மனித வாழ்க்கைக்கு தீங்கு விளைவிக்கின்றன. குடியிருக்க வீடு கட்டிக்கொள்ளத் தெரியாத மக்களுக்கு வெயிலும் மழையும் பெரும் பகையாயிருந்தன. விளக்கேற்றிக் கொள்ளத் தெரியாத மக்கள் இரவைக் கண்டு நடுங்கினார்கள். மலையை அளக்கமுடியவில்லை. கடலின் எல்லையைக் காணமுடியவில்லை. ஆற்றின் பெரும் வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது. இயற்கையைக் கண்டு மனிதர் அஞ்சி நடுங்கினர்.

பயங்கரமான இயற்கையை, அடி
பணிந்து உபசரிக்காவிட்டால், தங்களுக்கு ஆபத்து வந்துவிடுமென்று நம்பினர். எதேச்சையாய் சுதந்திரர்களாய் வசித்த மக்களிடையே அச்சம் தோன்றியது முதல், நிமிர்ந்து நிற்க சக்தியற்று வணங்க ஆரம்பித்தனர். கொளுத்தும் வெயிலையும், குமுறும் வானத்தையும், கொட்டும் மழையினையும், ஓடும் நீரையும், பரந்த கடலையும் மக்கள் வணங்கினர். மின்னலை நோக்கி, இடியை நோக்கி, காற்றை நோக்கி, கல்லை நோக்கி மனிதர் கும்பிட்டனர், இருளில் பூதங்கள், பைசாசங்கள் கொன்றுவிடும். காவு கொடுக்கவேண்டும். மனிதனுக்கு நோய் வந்தால் மாரியாத்தாள்—காளியின் சேஷ்டை, பூசை போடவேண்டும். மழையில்லை, பயிர் வாடுகிறது, வருணஜெபம் செய்யவேண்டும். யாகம் செய்து, ஆடு மாடுகளை பலியிடவேண்டும். இம்மாதிரி நினைத்ததற் கெல்லாம் அஞ்சி அடிபணிந்து, நாகரீகமற்று, காட்டு மிராண்டியாய் வாழ்வதே பண்டை மக்கள் வாழ்க்கையாகும்.

## அறிவு வளர்ந்தது

நாளடைவில் மக்களுடைய அறிவு வளர வளர, இயற்கை நிகழ்ச்சியின் உண்மையை அறிந்துகொண்டார்கள். வீடு கட்டிக்கொண்டால் வெயில் மழைக்கு அஞ்சவேண்டியதில்லை—மரத்தின் நிழல் தேவையில்லை. ஆதலால், மரத்தை வணங்கவேண்டியதில்லை. விளக்கேற்ற அறிந்துகொண்டால், இரு

ளில் பயமில்லை. அறிவு வளர்ச்சியால் பேய் பூதங்க ளின் பயம் குறைகிறது. விஞ்ஞான முதிர்ச்சியால் பயங்கள் ஒழிந்துபோகின்றன. இயற்கை மனித னிடம் வசப்பட்டுவிட்டது. ஆறுகளுக்கு பாலங்கள் அமைக்கவும், அணைகள் போடவும், மலைகளை குடையவும், கடலைக் கடக்கவும், வானத்தில் பறக் கவும் மனிதர் கற்றனர். இருளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. விளக்குகள் மலிந்துவிட்டன, இரவு பகலாய்விட்டது. இடி மின்னலிலிருந்து மின்சாரத்தை உண்டாக்கலாம். நினைத்தவிடத்தில், நினைத்த நேரத்தில், மழை வரவழைக்கலாம்—வருண ஜெபம் தேவை யில்லை. ஆடுமாடுகளைக் கொன்று யாகம் செய்யவேண்டியதில்லை. இயற்கை மனிதனுக்கு ஏவலாளியாக மாறின. வேலைக்கார னைக் கண்டு பயப்படுவதா? அச்சமும் அறிவும், நீரும் நெருப்பும் போன்று ஒன்றுக்கொன்று பகைமை கொண்டிருக்கின்றன. உலக் சரித்திரத்தில் ஆதியில், அச்சம் மேலிட்டு வளர்ந்தது. ஆனல், பிறகு, அறிவு வளர்ச்சியின் காரணமாக, அச்சம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோக நேரிட் டது. இதுவே காலப்போக்கு.

## புரோகிதன் முளைத்தான்

இவ்வித காலப்போக்கின் பலனய், தானகவே வளர்ந்துவரும் அறிவைத் தடைப்படுத்தி, மக் களை மறுபடியும் அச்சத்திற்கு ஆளாக்கித் தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ளக் கிளம்பியது

ஒரு கூட்டம். இதுவே, பொல்லா புரோகிதர் கூட்டம். மனிதர்கள் அச்ச மேலீட்டால், கல்லையும், மரத்தையும், வணங்க ஆரம்பித்த காலத்தில், அவ்வணக்கத்தை ஸ்திரப்படுத்தி, நிரந்தரமாக செய்துவைக்க ஏற்பட்ட தரகனே புரோகிதன்.

## தெய்வங்கள் முளைத்தன

இத்தரகர்கள், இயற்கைச் சாதனங்களைத் தெய்வங்களாக மாற்றினர். தெய்வங்கள் பொல்லாதவை என்றும், அவைகளை சாந்தப்படுத்த தங்களுக்கு வழி தெரியுமென்றும், இவர்கள் பாசாங்கு செய்தார்கள். தெய்வங்களுக்கும் தங்களுக்கும் அந்தரங்கத் தொடர்பு உண்டென்றும், கனவில் காட்சி தருகின்றனவென்றும், தங்கள்பேரில் ஆவேசமாக வருகின்றனவென்றும், அசரீரி என்றும், குறி சொல்வது என்றும், மை போடுவது என்றும், ஜோசியம், ஜாதகம், சகுனம், ஞான திருஷ்டி என்றும், இன்னும் பலவாறான புரட்டுகளெல்லாம் செய்து, பாமர மக்களை நம்பும்படி செய்தார்கள். தெய்வங்களின் குறிப்பறிந்து அவைகளைத் திருப்திசெய்ய, வழிகாட்டியாக இந்தத் தரகர்களே அமர்ந்தார்கள். பூசைப் போடுவது, மந்திரம் ஜெபிப்பது, பலி கொடுப்பது, வேண்டுதல், ஆராதனை, திருவிழா, தேர், முதலிய வழிபாடுகளை ஏற்படுத்தி, அவற்றைச் செய்துவைப்பதற்கு கூலி பெற்றார்கள். அறிவற்ற மக்களுக்கு தெய்வம் என்ற பூச்சாண்டி காட்டி, வஞ்சித்துப் பொருள் பறித்தார்கள்.

## மதம் முளைத்தது

பிறகு, இந்தத் தரகர் கூட்டத்திலேயே ஒரு வருக்கொருவர் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு, வளர்ந்து, அதன்மூலம் பொது மக்களிடையேயும் கலகங்கள் விளைந்தன. தரகருக்குள் ஏற்பட்ட போட்டி, அவர்கள் ஆராதிக்கும் தெய்வங்களுக்கு மாற்றப்பட்டன. இந்த தெய்வச் சண்டைகள் ஒன்றுபத்தாக வளர்ந்து, உலகமே ரணகளமாயிற்று. புரோகிதரின் சுயநலத்தால் ஏவப்பட்ட முட்டாள் ஜனங்கள், ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு, கோடிக்கணக்காக மாண்டார்கள். புரோகித கட்சியில் ஈடுபட்டு, அடித்துக்கொள்ளும் ஜனங்களை அடையாளம் கண்டுபிடிக்க, அவர்கள் நெற்றியில் கட்சி அடையாளம் இடப்பட்டது. அந்தந்த கட்சிகளுக் கேற்ப, தனித்தனியே விருதுகளும் சின்னங்களும் ஏற்பட்டன. இவ்வித சின்னங்களுடன்கூடிய கட்சி களுக்கே மதங்களென பெயர் வழங்கலாயிற்று. புரோகிதப் போட்டியிலிருந்தே மத யுத்தங்கள் கிளம்பின இந்த யுத்தங்களை தெய்வங்களே விரும்புவதாகவும், ஆதரிப்பதாகவும், நேரில் தெய்வங் களே நடத்துவதாகவும் புரோகிதக் கூட்டத்தார் புரளி செய்தார்கள். பாரத ராமாயண யுத்தங்கள், நர அசுர யுத்தங்கள் கடவுள்களாலும், கடவுள் அவதாரங்களாலும் செய்யப்பட்டதாக நம்பி, அதில் ஈடுபட்டு மக்கள் உயிர் துரந்தனர். சிவனும் விஷ்ணுவும் போட்ட சண்டைக்கு எல்லையில்லை. ஜெருசலேம் நாட்டில், கடவுளுடைய புத்திரனை கிருஸ்

துவுக்கும், கடவுளுடைய தூதனுன முகம்மது வுக்கும் நடந்த யுத்தத்தில் பெருகிய ரத்தவெள்ளம் இன்னும் வடியவில்லை. நமது நாட்டில் நடை பெறும் ஹிந்து—முஸ்லீம் சண்டைகள், வடகலை—தென்கலை சண்டைகள், சைவ—வைஷ்ணவ சண்டைகள் எல்லாம் புரோகிதச் சூழ்ச்சிகளாலேயே விளைகின்றன. நாட்டின் நலத்திற்கு முரணுன வாதங்களெல்லாம் பிராமணர்களாலும், முல்லாக்களாலும், பாதிரிகளாலுமே கிளப்பப் படுகின்றன.

## மூன்று ஆபத்துகள்

மனித வாழ்வில் இயற்கையாக ஏற்படும் மாறுதல்கள் மூன்று—பிறவி, மணம், சாவு. ஒரு மனிதன் பிறந்து, வளருகிறுன். பிறகு, தனது வளர்ச்சியின் முதிர்ச்சியில் காதல் கொண்டு, மணம் செய்துகொள்கிறுன். கடைசியாகத் தனது தேகம் தளர்ந்து இறக்கிறுன். இந்த மூன்று மாறுதல்களையும் ஒட்டி, குடும்ப வாழ்க்கையில் மூன்று நெருக்கடிகள் ஏற்படுகின்றன—கல்யாணம், பிரசவம், சாவு பிரசவத்தின்போது, தாயின் உயிருக்கு ஆபத்து. அன்னியருடைய உதவிவேண்டும். பிறந்த குழந்தையைக் காப்பாற்றவேண்டும், வளர்க்கவேண்டும், சமூக ஆதரவுவேண்டும். குடும்பத்தில் இது ஒரு நெருக்கடி.

கல்யாணத்தின்போது, ஆண்—பெண் இருவரின் வாழ்க்கை ஒன்றுபடுகிறது. இருவரும் தனித்திருந்த நிலைமை மாறி, புதிதாய் ஒருவர்மேல் மற்

றவருக்கு பாத்தியதைகள், கடமைகள் உண்டாகின்றன. இந்த நிலைமையை சமூகம் ஒப்புக்கொள்ள வேண்டும். இது இரண்டாவது நெருக்கடி.

மனிதர் மூப்பினாலும், நோயினாலும் திடீரென வும் இறக்கின்றனர். இறந்தவரைச் சார்ந்தவர்கள் நிலை கஷ்டமாகிறது. இறந்த பிணம் சீக்கிரத்தில் அழுகி நாற்றமெடுக்கும்—வீட்டைவிட்டு அப்புறப் படுத்தவேண்டும். மற்றவர்களுக்கு குந்தகமில்லாமல் ஓரிடத்தில் கொண்டுபோய் அதைப் புதைக்க வேண்டும், அல்லது எரிக்கவேண்டும். இது மூன்றாவது நெருக்கடி. இந்த மூன்றுவித நெருக்கடியில், சமூக உதவியில்லாமல் மனிதர் உயிர்வாழ முடியாது.

இந்த நெருக்கடிகளில்தான் புரோகிதக் கூட்டத்தாரின் தந்திரங்களுக்குச் சமயம் வாய்க்கிறது. நெருக்கடியில் அகப்பட்டுத் தவிக்கும் குடும்பத்தில் புரோகிதன் தானாகவே வலியவந்து—உள்புகுந்து, தன் சுயநலத்திற்கு வழி தேடிக்கொண்டான். ஒரு வீட்டில் சாவு, வாழ்வு ஏற்பட்டால், கட்டாயம் புரோகிதன் சடங்கு செய்ய வேண்டுமென்று கட்டுப்பாடு செய்துகொள்கிறான்.

### பிறவி

பிரசவ காலத்தில் வைத்தியர் தேவை, தாதியர்தேவை. தாயைக் காப்பாற்றவேண்டும், குழந்தையை வளர்க்கவேண்டும். இதற்குப் புரோகிதன் தேவையில்லை. ஆனால், தாய்க்குத் தீட்டு வந்து

விட்டதென்றும், அந்தத் தீட்டு, புரோகிதன் மந்திரம் சொல்லாவிட்டால் போகாதென்றும் கதை கட்டிவிட்டு, தன் வரும்படிக்கு வழி தேடிக்கொண்டான். குழந்தை பாவம் செய்து, ஜன்மம் எடுத்திருக்கிறதென்றும், அதற்கு சாந்தி செய்யவேண்டும் என்றும் சொல்லி, பொருள் சம்பாதித்தான். தீட்டு பாவம் என்பதெல்லாம் புரோகிதனின் ஜீவன உபாயங்கள்.

## மணம்

கலியாணமென்பது, வயது வந்த ஆணும், பெண்ணும் தனித்த வாழ்க்கையை விட்டு, கூட்டு வாழ்க்கையைக் கைக்கொள்வதாகும். இது மனித இயற்கை. ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் சுயமாக ஒருவர் பேரில் ஒருவருக்குக் காதல் ஏற்பட்டு, உண்டாகும் உணர்ச்சியே மனித பிறவியின் உன்னத நிலையாகும். இவ்வித உணர்ச்சியைத் தடைப்படுத்தாமல் அனுபவிக்க சந்தர்ப்பமளிப்பது தான் நாகரீகமடைந்த சமூகத்திற்கு அழகு. காதலைத் தடைப்படுத்துவது, அநாகரீகத்தின் அறிகுறி. ஆனால், புரோகிதக் கூட்டத்தார் மதத்தின் பெயரால், காதல் வாழ்க்கைக்குக் கொடிய தடைகள் ஏற்படுத்தினார்கள். தங்கள் வரும்படியை உத்தேசித்து, ஜாதகம், பொருத்தம், சகுனம், நாள், நட்சத்திரம் என்றெல்லாம் புளுகி, நெருப்பை மூட்டி, நெய்யைக் கொட்டி, புகையைக் கிளப்பி, அர்த்தம் தெரியாத மந்திரங்களைச் சொல்லி, சப்த

பதியென்றும், அம்மி மிதித்தலென்றும், அருந்ததி காணலென்றும், பொம்மலாட்டம் மாதிரி மக்களை ஆட்டிவைத்தனர். புரோகிதர், காசு பறிக்கவே கல்யாணச் சடங்குகளை ஏற்படுத்தினர். சடங்கில்லாத கல்யாணம் செய்துகொண்ட புருஷன்—மனைவியார் இன்பமுடன் வாழவில்லையா? அழகிய குழந்தையைப் பெற்றெடுக்கவில்லையா? சாந்தி முகூர்த்த இரவில்கூட மந்திரஞ்சொல்லி பெற்ற பிள்ளைகள் நொண்டியாகவும், குருடாகவும் பிறக்கவில்லையா? எல்லாப் பொருத்தமும் பார்த்து, சகல மந்திரங்களும் ஓதி, கல்யாணம் செய்துகொடுக்கப்பட்ட புரோகிதர் வீட்டுப் பெண்கள், ஆயிரக்கணக்காகத் தாலி அறுபட்டுத் தவிப்பதேன்? புரோகிதருக்கு வருவாய் என்பதைத் தவிர, கல்யாணச் சடங்குகளுக்கு வேறு அர்த்தமில்லை.

**சாவு**

ஒவ்வொருவருக்கும் சாவு ஏற்படுவது நிச்சயம். சாவைத் தடுக்க மனிதனுக்கு சக்தி ஏற்படவில்லை. சாவைத் தடுப்பது மனித சமூகத்துக்கு உகந்ததாகவும் தெரியவில்லை. வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களினாலேயே மனிதன் ஜீவிப்பதில் ருசி ஏற்படுகிறது. மாறுதலின்றி உயிரில்லை, உணர்ச்சியில்லை. கல்லைப்போன்ற உணர்ச்சியற்ற ஜடப்பொருளே இறக்காமல் இருக்கமுடியும். ஆகவே, மனிதன், சாவை எதிர்நோக்கியே வாழ்க்கை நடத்தவேண்டும். அப்படி ஒவ்வொருவரும் சாகும்

பொழுது, உயிருடன் மற்றவருக்குத் தீமை விளையாமலிருக்க வழிதேடவேண்டும். இறந்தவனுக்கு மற்றவர்கள் செய்யவேண்டிய கடமை, அவன் பிணத்தை எடுத்து அடக்கம் செய்வது ஒன்றேயாகும். இக்கடமையைச் செய்வது சமூக ஊழியமாகும். இதற்கு குந்தகம் விளைவிப்பது சமூக துரோகமாகும். நல்லவனாயினும் கெட்டவனாயினும், ஒருவன் இறந்துவிட்டால், அவனிடம் நமக்குள்ள மனோபாவத்தைப் பிணத்திடம் காண்பிப்பது மதியீனம். இறந்தவனுடைய உறவினர் மனம் நொந்திருக்கும் சமயத்தில், அவர்களிடமிருந்து பணம் பறிக்க முயலுவது பாதகச்செயலாகும். இந்தப் பாதகச்செயலையே புரோகிதக் கூட்டத்தார் செய்துவருகின்றனர். ஒரு பிராணன், இறக்கும் தருவாயிலிருக்கும்போது படும் கஷ்டத்திற்கு சாந்தியாக, வைத்தியமுறைப்படி சிகிச்சை செய்வது ஜீவகாருண்யமுள்ளவர்கள் கடமையாகும். அதைவிட்டு, தொண்டைக் குழியில் துடித்துக் கொண்டிருக்கும் உயிரை வாட்டி, கோதானமென்று காசு பறிக்கும் கல்நெஞ்சரை என்னவென்று சொல்லுவது? இறந்த பிணத்தைப் போட்டுக் கொண்டு உற்றார் உறவினர் தவித்துக்கொண்டிருக்கும்பொழுது, "பிணத்தைச் சுடுவதற்குமுன் எனக்குக் காசு கொடு" என்று நிர்ப்பந்தம் செய்பவர், பிணம் தின்னும் கழுகுக்கும் கேடுகெட்டவரன்றோ?

## மேல் உலகத்துக்கு டிக்கெட்

செத்தவன், மேலே ஒரு உலகத்திற்குப் போவதாகவும், அந்த யாத்திரைக்கு டிக்கெட் தங்களிடம் பணம் கொடுத்து வாங்கவேண்டுமென்றும், புரோகிதர்கள் வற்புறுத்துகிறார்கள். செத்த பிணத்தை அடக்கம் செய்தபிறகு, தினந்தோறும்—மாதந்தோறும் — வருஷந்தோறும் சிரார்த்தங்கள் செய்து, தங்கள் வயிற்றை நிறப்பவேண்டுமென்று, புரோகிதர் வம்பு செய்கின்றனர். இம்மாதிரி மேலுலக வாழ்க்கையைப் பற்றிப் பிரசாரம் வலுக்கவே, மக்களுக்கு அனாவசியமான பயங்களும், கவலைகளும் ஏற்பட்டு, இவ்வுலகில் இப்பிறவியில் தங்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதில் கவலை செலுத்துவதை விட்டு, தங்கள் மரணத்திற்குப் பின் — அடுத்த உலகத்தில்—அடுத்த ஜன்மத்தில் தாங்கள் அடையப்போகும் நன்மையைப்பற்றி, சதா சிந்தனை செய்யத் தொடங்கினார்கள். இதன் மூலம் மொழி அபிவிருத்தி குன்றி, ஆராய்ச்சியும், அறிவு வளர்ச்சியும் மங்கிப்போயின. வாழ்க்கையிலுள்ள சுகத்தை சிற்றின்பமென கேவலப்படுத்தினார்கள். மேலுலகத்தில் அடையப் போவதாக நினைத்துக்கொண்ட போகத்தை, பேரின்பமென எண்ணிப் பெருமூச்செரிந்தார்கள். நமக்குக் கிடைக்கக்கூடிய உலகம், இதோ, நம் கண்முன் தெரியும் இந்த உலகம் ஒன்றுதான். நாம் அடையக் கூடிய பிறவியும், நம்முடைய அவயவங்களையும், நம் சரீரத்தையும் ஒட்டிய இந்தப் பிறவிதான்

என்ற பிரச்சினை தோன்றிய பிறகுதான், நமது வாழ்க்கையின் அருமையும், ருசியும் புலப்படும். அப்பொழுதுதான் வாழ்க்கை நடத்துவதில் நமக்கு அக்கறை ஏற்படும். அப்பொழுதுதான் வாழ்க்கையின் இன்பம் நுகரலாம். அப்படிக்கில்லாமல் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு, சொர்க்கலோக பிரமை கொண்டிருக்கும் வரையில், நமது வாழ்க்கை மிருகத்தின் வாழ்க்கையைவிட கேவலமாய் முடியும்.

## மனிதரைவிட மிருகமே மேல்

மிருகங்கள் மழை வெயிலுக்கு அடக்கமாய் வீடு கட்டிக்கொள்ளவும், அங்கத்தை மூட உடை உடுத்திக்கொள்ளவும், ஆகாரத்தை சமைத்து சாப்பிடவும் கற்றுக்கொள்ளாவிட்டாலும், சொர்க்கத்தையோ, அடுத்த ஜன்மத்தையோ நினைத்து அவைகள் கவலைப்பட்டு மனமுடைவதில்லை. தாங்கள் பாபம் செய்துவிட்டதாகக் கருதி, பிராயச்சித்தம் தேட அலைவதில்லை. கடவுளென்று நினைத்துக்கொண்டு, காலையிலும் மாலையிலும், பகலிலும் இரவிலும், அடித்து மோதி விழுவதில்லை. கிடைக்கும் உணவை ருசியோடு உண்டு, வாய்க்கும் இன்பத்தைக் காதலோடு அனுபவித்து, சாவு வரும்போது கவலையின்றி இறக்கின்றன. பகுத்தறிவு படைத்த மனிதன் இவ்வுலக இன்பத்தைப் பன்மடங்கு பெருக்கிக்கொள்ள வசதியிருந்தும், கடவுள் பயத்தால், பாப உணர்ச்சியால்,

அடுத்த உலகமோகத்தால் புரோகித சூழ்ச்சியால் கிடைக்கும் இன்பத்தைத் தூர உதைத்துத் தள்ளி விட்டு, கிடைக்காத — எட்டாத — காணாத இன்பத்தை எண்ணி, ஓயாத துன்பத்தையே அனுபவிக்கிறான்.

## பிரயாண ஆயத்தம்

மதப்பற்றுள்ள மனிதன் தான் இறந்த பிறகு, மோட்சலோகத்தில் தேகம் அனுபவிக்கவேண்டியதற்கு ஆயத்தங்கள் செய்துகொண்டு, அதற்கு வேண்டிய முஸ்தீப்புகள் தேடுவதிலேயே தன் காலத்தைக் கடத்திவிட்டு, தன் கண் முன் காணப்படும் உலகத்தை அசட்டை செய்கிறான். இவ்வித பரலோக மோகமே சமூக முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயிருக்கிறது. பரலோக மோகம் பிடித்த மனிதர்கள் தங்கள் நேரத்தையும், ஊக்கத்தையும் சமூக நன்மைக்கு உபயோகப்படக்கூடிய வழிகளில் செலவழிக்காமல், தங்கள் ஆத்மாவுக்கு சொர்க்கப் பதவியளிக்குமென்று கருதப்படும் தீயவழிகளிலேயே செலவழிக்கிறார்கள். பள்ளிக்கூடம், ஆராய்ச்சிசாலை, தொழிற்சாலை, ரோட், ஜலவசதி முதலிய பொது- தன்மைக்கான துறைகளில் ஈடுபடாமல் சோம்பேரிகள் புசிக்க சத்திரங்கள் கட்டவும், புரோகிதரும் வேசையரும் பிழைக்க உற்சவங்கள் ஏற்படுத்தவும், அறிவைப் பழிக்கும் கோயில்களை ஸ்தாபிக்கவுமே முற்படுகிறார்கள்.

## சுரண்டித் தின்னும் புரோகிதம்

இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் பிறப்பு, மணம், சாவு என மூவகைப்பட்ட நெருக்கடிகள் ஏற்பட்டு மனிதர்களுக்கு சோர்வு உண்டாகும்போதெல்லாம் புரோகிதர்கள் பிரவேசித்து, தங்களைத் திருப்தி பண்ணினால்தான் நெருக்கடியிலுள்ளவர்கள் தப்ப முடியுமென்னும் நம்பிக்கையும், அதற்குத் தகுந்த பழக்கவழக்கங்களும் ஏற்படுத்திக்கொண்டதால்தான் புரோகிதர் ஆதிக்கம் இவ்வளவுதூரம் வலுவடைந்து வந்திருக்கிறது. ஒவ்வொருவரும் பிறந்து மணந்து, இறந்துதான் தீரவேண்டுமாகையால் புரோகிதருக்கு அடங்கி நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிர்ப்பந்தத்திலிருந்து மக்களை விடுவிப்பது அவசியமாகும். சோர்வடைந்தவருக்குத் துணை செய்வது மனிதத் தன்மை. சோர்வடைந்தவரை சுரண்டித் தின்பது புரோகிதத் தன்மை.

X

# மறுமலர்ச்சி வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| புரோகிதன் முளைத்தான் | 0 | 3 | 0 |
| பார்ப்பனச் சூழ்ச்சி அல்லவா? | 0 | 3 | 0 |
| எது வகுப்புத்துவேஷம்? | 0 | 3 | 0 |
| நடிகவேள் எம். ஆர். ராதா | 0 | 3 | 0 |
| திருப்பதி மொட்டை —எஸ். குருசாமி 'விடுதலை' ஆசிரியர் | 0 | 6 | 0 |
| ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா! "குத்தூசி" | 0 | 6 | 0 |
| கடவுளா? காமுகனா? | 0 | 6 | 0 |
| சொல்வதெல்லாம் செய்தல் சமத்துவம் (இரா. நெடுஞ்செழியன்) | 0 | 2 | 0 |
| வஞ்சகக் கூட்டம் வாழ்கிறது | 0 | 3 | 0 |
| கடவுளும் மனிதனும் | 0 | 3 | 0 |
| பரமசிவனுக்கு பகிரங்கக் கடிதம் | 0 | 3 | 0 |
| கருஞ்சட்டை ஒழியவேண்டுமா? | 0 | 3 | 0 |

## அறிஞர் அண்ணா நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் | 0 | 2 | 0 |
| ஸ்தாபன ஐக்கியம் | 0 | 2 | 0 |
| பொருள் | 0 | 4 | 0 |
| மறுமலர்ச்சி | 0 | 4 | 0 |
| சொல்வதெல்லாம் செய்தல் சுதந்தரம் (கிளேஸ் பதிப்பு) | 0 | 2 | 0 |
| அண்ணாவின் உவமைகள் | (அச்சில்) | | |

வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு

தபால்செலவு இனாம்

---

**மறுமலர்ச்சி நூல் நிலையம்**

18, ஆயலூர் முத்தையா முதலி தெரு

சென்னை - 1.